1977 ஆகஸ்டு 9]

அரசாங்கத்தை டன்னுக்கு ரூ. 175 கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டார்கள். அதற்குப் பின்னர்;, திருச்சியிலே ஒரு மகாநாடு நடத்தி, ரூ. 125 டன்னுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னர்கள். அப்போது முதல் அமைச்சராகவும் இப்போது எதிர்க் கட்சித் தலைவராகவும் இருப்பவர் கலந்து கொண்டு பேசினர்கள். அப்போது, போராட்டம் எல்லாம் நடத்துவதாகப் பேசினர்கள், அதுபற்றி, அவரையே விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு மு. கருணநிதி : அதைப்பற்றி விளக்குவதற்கு, தனியாக ஒரு மணி நேரம் ஒதுக்கினல், பதிலளிக்க ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. உரிமைப் பிரச்சினை:

'சிவப்பு நாடா;—தினசரிப் பத்திரிகையின் மீது.

மாண்புமிகு திரு கி. மனேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் 188 வது விதியின்கீழ், உரிமை மீறல் பிரச்னை குறித்து தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சென்னை, 8—8—1977 ஆம் தேதி 'சிகப்பு நாடா' என்னும் தினசரியில் பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அச்செய்தி பேரவைத் தலைவர் பதவிக்கும், இந்த அவைக்கும் மாசு கற்பிப்பதாக உள்ளது. இது அவையின் உரிமைகளைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது. எனவே, இதைக் குறித்து நன்கு விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க, உரிமை குழுவிற்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

(முற்பகல் 9–40)

இது உரிமை மீறல் பிரச்சினை என்று நான் சொல்லுவதற்குக் காரணம்—பொதுவாக நாடாளுமன்றமானலும் சரி, சட்டமன்றமானலும் சரி, நாம் இன்றைக்கு வழித்துணையாகக் கொண்டிருக்கிற முக்கியமான விதிமுறைகள் 'மேஸ் பார்லிமென்டரி ப்ரொசீஜரில்' இருந்து நாமும் உருவாக்கிக் கொண்டிருக்கிற விதிமுறைகளில் இருந்து நாம் கடைப்பிடித்து வருகிறேம். 'சிகப்பு நாடா' பத்திரிகையில் தங்களைப் பற்றி எழுதப் பட்டிருக்கும் குறிப்புகளைப் படித்தால் இந்தச் சபைக்கு

[திரு. கி. மனேகரன்] [1977 ஆகஸ்டு 9

அவமானம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக நான் படித்துக் காட்ட விரும்பவில்லை. மிகக் கீழ்த்தரமான முறையில், அவதூறு கற்பிக்கின்ற முறையில் அடிப்படையற்ற பொய்க் குற்றச்சாட்டுக்களை, கற்பனைக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி உங்களை அவமானப்படுத்துவதன் மூலம் இந்த அவையை அந்தப் பத்திரிகை அவமானப்படுத்தியிருப்பதாக நான்நம்புகிறேன். 'மேஸ்பார்லிமென்டரி ப்ரொசிஜரில்.'

"It is a breach of privilcge and contempt of the House to make speeches or to print or publish any libels reflecting on the character of the House, proceedings of the House or its Committees or any member of the House or reflecting on his Character or aonduct as Member of Parliament."

நான் இங்கே குறிப்பிட விரும்புவது—இந்தச் சபையிலே இருக்கும் அங்கத்தினர்களைப் பற்றி மட்டுமல்லாமல், குறிப்பாக சபாநாயகரைப் பற்றி, அதுவும் நீங்கள் வகித்திருக்கும் பதவிக்குக் களங்கம் தேடுகின்ற வகையில் வந்திருக்கும் இந்தச் செய்தி மிகவும் கடுமையாகக் கண்டிக்கக்கூடிய செய்தி என்பதை நான் வன்மையாக இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பத்திரிகைகளின் சுதந்திரங்களுக்கு நூற்றுக்கு நூறு உரிமை இருக்கவேண்டுமென்று வாதிடுகின்ற கட்சியைச் சார்ந்த நான், இப்படிப்பட்ட கீழ்த்தரமான செய்திகளைத் தரமுள்ள பத்திரிகைகளைச் சார்ந்த எழுத்தாளர்களோ அல்லது நிருபர்களோ அல்லது ஆசிரியர்களோ அல்லது பொறுப்புள்ள

அரசியல் கட்சியின் தலைவர்களோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் இந்த உரிமை மீறல் பிரச்சினையை இங்கே வைக்கிறேன். இதை நான் இங்கே படித்துக் காட்டவில்லை என்று சொன்னேன்—சில பேர் கேட்கக்கூடும். 'என்ன எழுதியிருக்கிறது என்று அது குறிப்பேட்டில் இடம் பெறுவது நல்லதல்ல. தயவுசெய்து அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்வது நியாயமாக இருக்கும். அவ்வளவு அருவருக்கத் தக்க முறையில் உங்களைப் பற்றிக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. நீங்கள் இந்தச் சபையில்—'You are the custodian of privileges and rights cf members of the House' அதிலிருந்து உங்களுடைய தரம், தகுதி ஊருக்கும் உலகுக்கும் தெரியும். அப்படிப்பட்ட உங்களுக்கு அவதூறு கற்பிக்கின்ற முறையில் வந்திருக்கிற காரணத்தால் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்—இதை நன்ருக விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க இப்பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விப்பட்டு நிறைவேற்றப் பெற்று உரிமைக் குழுவுக்கு அனுடப்பெற்றது.